**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண்.154/2019**

DW1 – கண்ணன்,த/பெ.கலியபெருமாள்
நாள்–20.03.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் புல எண் மாறியுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்திற்கு வடக்கும், கிழக்கும் எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் தென்புறம் பாலசுப்பரமணியத்தின் நஞ்சை நிலம் உள்ளதா என்றால் தெரியாது. தாவா சொத்து எனது தகப்பனரால் வாதிக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் சரிதான்.ஆனால் புல எண் மாறியுள்ளது. தாவா சொத்தின் மேற்கே வாதியின் கடையும் குடியிருப்பும் உள்ளது என்றால் நான்கெல்லை சரியாக என்னால் கூற இயலாது.

இவ்வழக்கில் எனது தகப்பனார்தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யதுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதிக்கு எனது தகப்பனார் விற்பனை செய்யவில்லை என்று நான் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாரின் இறப்பிற்கு பிறகு தான் இவ்வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. வா.சா.ஆ.1 ஆன 29.08.2009 தேதியிட்ட கிரய ஆவணத்தில் விற்பவர் என்னும் இடத்தில் உள்ள கையெழுத்து எனது தகப்பனாரின் கையெழுத்து தான். ஆவணத்தின் இரண்டாவது பக்கத்தில் உள்ள புகைப்படமும் எனது தகப்பனருடதுதான். தாவா சொத்தின் சரியான புல எண்.215/1A2 என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சரியான புல எண்.215/1A2 இல்லை என்பதை காட்டக்கூடிய ஆவணம் என்னால் தாக்கல் செய்ய இயலுமான என்றால் இயலும்.

எனது எதிர்வழக்குரையில் தாவா சொத்தின் புல எண்.215/1A2 இல்லை என்பதற்கு ஏதேனும் ஆவணத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனாரான 1–ம் பிரதிவாதி இறந்தினால் வாரிசு அடிப்படையில் எங்களை தப்பினர்களாக சேர்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி 1–ம் பிரதிவாதியை அனுகி தாவா சொத்தில் பிழைதிருத்தம் ஆவணம் எழுதிக்கொடுக்க கேட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு வாதி கேட்கவே இல்லை.

தாவா சொத்தின் புல எண் மாற்றி எழுதிக்கொடுப்பதினால் எனக்கு என்ன இழப்பு என எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொலல்லியுள்ளேன். அவ்வாறு நான் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை சரியான நான்கெல்லை குறிப்பிட்டுதான் எனது தகப்பனார் வாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றும், எங்கள் உரிமை மூல ஆவணத்தின் குறிப்பிடப்பட்டிருந்த புல எண்ணின் அடிப்படையில்தான் எனது தகப்பனார் கிரயம் எழுதிக்கொடுதுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சரியான புல எண். புல எண்.215/1A2 என விளம்புகை செய்வதினால் எங்களுகது எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்றால். சரியல்ல.

இவ்வழக்கிற்கு நெடுஞ்சாலை துறையினர் அவசிய தரப்பினர் அல்ல என்பதால்தான் தரப்பினராக சேரக்கவில்லை என்றால் சரியல்ல. நெடுஞ்சாலை துறையினர் தரப்பினராக சேர்க்க தவறியதால் வழக்கு எவ்வகையிலும் குறைபாடு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ல் குறிப்பிட்டுள்ள நான்கெல்லைபடி தாவா சொத்தை வாதி இதுநாள் வரையில் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. புல எண்.புல எண்.215/1A2 –ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாலை விரிவாக்க பணிக்காக தாவா சொத்தின் ஒரு பகுதி ஆர்ஜிதம் செய்யபோகும் விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு நில ஆர்ஜிதம்

செய்யபோகும் சொத்தில் நாங்கள் பங்கு கேட்பதற்காகவே எவ்வித உரிமையும் இல்லாத நாங்கள் இவ்வழக்கை எதிர்வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா வாதி கோரியப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**